செ.வெ.எண். 371/2017 நாள்: 02.08.2017

**காஞ்சிபுரம் மாவட்டம், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ள வண்டலூர், கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்தில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, சீரமைப்பு பணிகளை துவக்கி வைத்தார். சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைமை நிர்வாக அலுவலர் திரு.எம்.மதிவாணன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா வரும் 30.08.2017 அன்று வண்டலூர், கிளாம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையம் அமையவுள்ள இடத்தில் நடைபெற உள்ளது. விழா நடைபெறும் இடத்தை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் சீரமைப்பு பணிகளை துவக்கி வைத்தார். விழா மேடை அமைக்கப்படும் இடம், விழா பந்தல் முகப்பு அமைய வேண்டிய இடம் மற்றும் பொதுமக்கள் அமர போட வேண்டிய இருக்கைகள் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

மேலும், விழாவிற்கு பொதுமக்கள் அதிக அளவில் கூட இருப்பதால், பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையிலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையிலும் விழாவினை நடத்துவதற்கு உரிய ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து, விழா மேடைக்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்கள் வந்து செல்வதற்கான வழிகள், பொதுமக்கள் வந்து செல்வதற்கான வழிகள், தடுப்புகள் எங்கெங்கு அமைக்கப்பட வேண்டும், எவ்வளவு அகலமாக அமைக்கப்பட வேண்டும் குறித்து ஆலோசித்தார். பின்பு விழாவிற்கு வரும் வாகனங்கள் நிறுத்த இடவசதியும், அவ்வாகனங்கள் போக்குவரத்து நெரிசல் இன்றி உள்நுழையவும், வெளி செல்லவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளமாறு கூறினார். பத்திரிகையாளர்கள் அமர்வதற்கான இடம், கணினி அறை, கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் மேடை அமைப்பு, விழாவிற்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் பயன்படுத்த ஏதுவாக கழிவறைகள் ஏற்பாடு செய்தல் உட்பட பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சௌரிராஜன், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.என்.ராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம்.கோதண்டபாணி, திரு.கே.பழனி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிட்லப்பாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வாலாஜாபாத் பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், திரு.தன்சிங், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.காஞ்சி பன்னீர் செல்வம், பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் திரு.சர்வேஸ்வரன், நகர மண்டல பொறியாளர் திரு.முருகேசன், பேரூராட்சி உதவி இயக்குநர் திரு.மனோகரன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவள்செல்வி, காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு.தென்னரசு மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**